**STC 10/2021** Dt: 02.09.2023

எதிரி தரப்பில் பு.தா.சா.1 முதல்விசாரணை செய்யப்பட்டு எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of September 2023.

02.09.2023

பு.தா.சா.1–மோகன்தாஸ்

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) எதிரி கொடுத்த காசோலை எண் தெரியுமா என்றால் காசோலை எண்.176272 ஆகும். ரூ.2,57,000 த்தை நகை அடகு வைத்து கொடுத்துள்ளேன் என்பதை காட்டக்கூடியதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ரூ.2,57,000 த்திற்கு எத்தனை பவுன் நகையை வங்கியில் அடகு வைத்தேன் என்றால் தற்போது எனக்கு நினைவில் இல்லை. நகை எனது மனைவியின் நகை ஆகும்.

2) எதிரி எனது வீட்டில் வைத்து தான் காசோலை வாங்கிச்சென்றார். யார் முன்னிலையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் யார் முன்னிலையிலும் எதிரிக்கு நான் பணம் கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் என்று காசோலை கொடுத்தார் என்றால் 26.08.2020 ம் தேதி காசோலை கொடுத்தார். காசோலையை என்று வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 17.09.2020 ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தேன். இவ்வழக்கின் எதிரி நான் கூடுதல் வட்டி கேட்பதாக ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தபின்பு காசோலை கொடுத்தாரா என்றால் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவிற்கு பின்பு தான் காசோலை கொடுத்தார்.

3) எதிரிக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக புகார் ஏதும் காவல்நிலையத்தில் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். மாவட்ட துணைக்கண்காணிப்பாளரிடம் எதிரி எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் எனக் கூறி புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. எதிரிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் பணம் வாங்கினால் அதை திருப்பி கொடுத்துவிடுவார் என்று சொன்னால் சரிதான். எதிரியிடமிருந்து ஒரு காசோலை தான் வாங்கினேன்.

4) காசேலை எண்.176271 என்ற காசோலையை நான் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் நடத்தி வரும் கமிஷன் மண்டியின் பெயர் சத்யா கமிஷன் ஆகும். எதிரி நடத்தி வரும் மண்டியின் பெயர் KE பிராசஸ் ஆகும். என்னிடமிருந்து வாங்கிய பணத்தை எதிரி திரும்ப செலுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கும்போது பிணையமாக கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து எதிரி பணம் செலுத்திய பின்பும் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

5) எதிரி என்னிடம் ரூபாய் 10 லட்சம் கடன் பெற்றதற்கு பிணையமாக கொடுத்து வைத்திருந்த காசேலை எண்.176271 யை ரூபாய் 10 லட்சத்தை திருப்பி கொடுத்தால் அவரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் மேற்படி காசோலை என்னிடம் கிடையாது. எதிரியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு காசோலையை வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலை தொகை முழுவதையும் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6) SMK மாரியப்பசெட்டியார், VPS ரத்தினநாடார், PSA தியாகராஜநாடார், PKS

பன்னீர், AK பழனி, BRM முகமது, MBT தாதா ஆகியோர்கள் கமிஷன் மண்டி நடத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். நான் மேற்படி நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வாங்குவேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவில் ரூ.4,02,800/- தரவேண்டும் என்று தான் கூறி புகார் கொடுத்தேன் என்றால் தற்போது எனக்கு நினைவில் இல்லை.

7) புகாரின் விசாரணை முடிவில் நான் கொடுத்த பணத்தை எதிரி எனக்கு கொடுக்க வேண்டும் என்று பேசி முடிக்கப்பட்டது. எதிரி அனுப்பிய மறுப்பு அறிவிப்பிற்கு மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணத்தை ஆயிரம் தாளாக கொடுத்தேனா அல்லது இரண்டாயிரம் தாளாக கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் பணம் கேட்ட அன்றே நான் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.